## சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

## OS. No. 228 /2024

**29.10.2025**

## P.W.1- முத்துக்கண்ணி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2, 5, 6, 7ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

நான் தாக்கல் செய்த நிலத்திற்கு எத்தனை சென்டு என்று எனக்கு தெரியாது. நான்கு மால் பற்றி எனக்கு தெரியாது. தாவா இடத்தில் நான் குடியிருக்கிறேன். தாவா இடத்தை நீதிமன்றத்திலிருந்து அளக்க வந்தார்கள். அவ்வாறு அளந்தபோது அந்த இடத்தில் 2 வீடுகள் இருந்தன. அதில் ஒரு வீட்டில் யார் இருந்தார்கள் என்றால் தெரியாது. தாவா நிலத்தில் உள்ள 2 வீட்டிலும் நான் தான் குடியிருக்கிறேன். அந்த 2 வீடுகளும் பழைய வீடுகளாகும். மேற்படி 2 வீடுகளும் எனது பெற்றோர்கள் கட்டியது. தாவா சொத்தில் உள்ள 2 வீட்டில் ஒரு வீடு பூட்டிய நிலையில் உள்ளது. மேற்படி பூட்டு போடப்பட்ட வீட்டை யார் கட்டியது என்றால் தெரியாது. பூட்டு போட்ட வீட்டை ஏன் கட்டும்போது தடுக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. நான் தாவா சொத்தில் குடியிருந்தும், தாவா சொத்தில் வீடு கட்டும்போது தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3வது பிரதிவாதி தாவா சொத்தில் 2013ல் இடம் வாங்கி வீடு கட்டியது எனக்கு தெரியும் என்றால் தெரியாது. 2013ல் நான் தாவா சொத்திற்குள் தான் குடியிருந்தேன். எனக்கு உரிமையில்லாததால் நான் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது அப்பாவுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். எனது அப்பா அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். எனது அப்பாவுக்கு ஒரு ஆண் பிள்ளையும், இரண்டு பெண் பிள்ளைகளும் ஆவார்கள். பொன்னம்மாள் என்ற அக்கா இருந்தார் என்றால் சரிதான். அவர் ஒரு வாரிசை விட்டுவிட்டு இறந்து விட்டார் என்றால் சரிதான். மேற்படி பொன்னம்மாளின் வாரிசை வழக்கில் சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனது அப்பா உயிருடன் இருக்கும்போது தனது மகள்களுக்கு திருமணம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது அப்பா 1969ல் உடல்நிலை குறைவால் இறந்துபோனார் என்றால் சரிதான்.

அவ்வாறு இறக்கும்போது மகனுக்கு சொத்துக்களை தானம் கொடுத்ததாக எனது அப்பா சொன்னார் என்றால் சரிதான். மேற்படி தானப்படி எனது சகோதரர் எங்களுக்கு பங்கு இல்லை என்று கூறிவிட்டார் என்றால் சரிதான். தற்போது நாங்கள் சொத்தில் பங்கு கேட்கிறோம் என்றால் சரிதான். பட்டா பால்ச்சாமி பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. எனது அப்பா பெயரில் உள்ளது. எனது அண்ணன் பால்ச்சாமி இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது அண்ணனுக்கு மனைவி உள்ளார் என்றால் காதல் திருமணம் செய்ததால் பேச்சுவார்த்தை இல்லை. எனது பெற்றோர்கள் தான் எனது அண்ணனுக்கு திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரியல்ல. எனது அண்ணன் அவரது மனைவிக்கு தானம் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 3வது பிரதிவாதி ராமர் பற்றி எனக்கு தெரியாது. அவர் எந்த ஊரை சேர்ந்தவர் என்று எனக்கு தெரியாது. 3வது பிரதிவாதி இறந்தபிறகு அவரது வாரிசுகள் தாவா சொத்தில் 15 சென்டில் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் தெரியாது. எனது அண்ணன் மனைவி அவருக்கு தானமாக கிடைத்த சொத்தை 3வது பிரதிவாதிக்கும், மற்ற பிரதிவாதிகளுக்கும் கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் தெரியாது. வழக்கிற்காக தெரியாது என சொல்கிறேன் என்றால் சரியல்ல. 15ம் பிரதிவாதி கடைசியாக கிரையம் வாங்கி அவரது மனைவிக்கு எழுதிக்கொடுத்து அவர் அவரது தாயாருக்கு எழுதிக்கொடுத்து அதன்பிறகு அவரிடமிருந்து 15ம் பிரதிவாதி தாவா நிலத்தை கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது பெயரில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வீட்டடி நிலத்தை எனது அண்ணன் மலைச்சாமிக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் தெரியாது. 8ம் பிரதிவாதியை எனக்கு தெரியாது. 8ம் பிரதிவாதியாக சென்னம்மாளை சேர்த்துவிட்டு தற்போது தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 8ம் பிரதிவாதி தாவா 3ம் இலக்க சொத்தை வைத்துள்ளார் என்றால் தெரியாது. எனது அப்பா இறந்து 57 வருடங்கள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் வழக்கானது காலம்கடந்த வழக்கு தோஷத்திற்கு உட்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பெயரில் தான் தாவா சொத்திற்கு வருவாய்துறை ஆவணங்கள் உள்ளன என்றால் சரியல்ல. நான் திருமணம்

முடிந்தது தாவா ஊரில் தான். தாவா சொத்தை நான் கூட்டாக அனுபவிக்காத காரணத்தினால் நான் செலுத்திய நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. அவசிய தரப்பினரை சேர்க்காத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கததக்கதல்ல என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.10.29 15:11:08 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.